Tsi8SS

தென்காசி மாவட்டம்
அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2023
-----

# வகுப்பு 8

காலம்: 2.30 மணி **சமூக அறிவியல்** மதிப்பெண்கள்: 100

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 10×1=10

1) இந்தியாவில் ஆங்கிலேயர்கள் கட்டிய முதல் கோட்டை
அ) வில்லியம் கோட்டை ஆ) செயின்ட் ஜார்ஜ் கோட்டை
இ) ஆக்ரா கோட்டை ஈ) டேவிட் கோட்டை

2) 1757 ஆம் ஆண்டில் வங்காளத்தை ஆட்சி செய்தவர்
அ) சுஜா-உத்-தௌலா ஆ) சிராஜ்-உத்-தௌலா
இ) மீர்காசிம் ஈ) திப்பு சுல்தான்

3) காலங்காலமாக ஓரங்கட்டப்பட்டிருந்த சமூகப் பெண்களுக்கெனப் பள்ளி ஒன்றை நிறுவியவர் யார்?
அ) ஜோதிபா பூலே ஆ) ராஜாராம் மோகன்ராய்
இ) கேசவ சந்திரசென் ஈ) சர் சையது அகமதுகான்

4) கம்பளி மற்றும் தோல் தொழிற்சாலைகள் காணப்படும் முக்கிய இடம் ................
அ) பம்பாய் ஆ) அகமதாபாத் இ) கான்பூர் ஈ) டாக்கா

5) ஆப்பிரிக்காவின் தென்கோடி முனை ................
அ) கேப்பிளங்கா ஆ) அகுல்காஸ் முனை
இ) நன்னம்பிக்கை முனை ஈ) கேப்டவுன்

6) சார்புத்துறை ................ வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது.
அ) 4 ஆ) 3 இ) 2 ஈ) 5

7) புவி பெறும் ஆற்றல் ................
அ) நீரோட்டம் ஆ) மின்காந்த அலைகள்
இ) அலைகள் ஈ) வெப்பம்

8) இந்திய அரசியலமைப்பின் முகவுரை திருத்தப்பட்ட ஆண்டு ................
அ) 1951 ஆ) 1976 இ) 1974 ஈ) 1967

9) **கூற்று** : டிசம்பர் 10 ஆம் நாள் மனித உரிமைகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.
**காரணம்** : இது எலினார் ரூஸ்வெல்டின் பிறந்த நாளை நினைவு கூர்கிறது.
அ) கூற்று சரி ஆனால் காரணம் கூற்றை விளக்குகிறது.
ஆ) கூற்று சரி காரணம் கூற்றை விளக்குகிறது.
இ) கூற்று காரணம் இரண்டும் சரி.
ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு.

10) இந்திய ரூபாய் குறியீட்டினை (₹) வடிவமைத்தவர் யார்?
அ) உதயகுமார் ஆ) அமர்த்தியாசென்
இ) அபிஜித் பானர்ஜி ஈ) இவற்றில் எவரும் இல்லை

## II. கோடிட்ட இடங்களை நிரப்புக: 5×1=5

11) தொழிற்புரட்சி நடைபெற்ற இடம் ............
12) இந்தியாவின் 'உள்ளாட்சி அமைப்பின் தந்தை' என்று அழைக்கப்படுபவர் ............
13) நிலச்சரிவு ............ இடருக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.
14) ஆளுநரின் பதவிக்காலம் ............ ஆண்டுகள் ஆகும்.
15) இந்திய ரிசர்வ் வங்கி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு ............

## III. பொருத்துக: 10×1=10

16) அ)

| | | | |
|---|---|---|---|
| 1. | காலநிலை | - | தீவிரவாதம் |
| 2. | ஈரநிலைமானி | - | சுனாமி |
| 3. | தாவரங்கள் | - | நீண்ட நாளைய மாற்றங்கள் |
| 4. | பனித்துளி மற்றும் மழைத்துளி | - | ஈரப்பதம் |
| 5. | மனிதனால் உருவாக்கப்படும் இடர் | - | கல்மழை |
| | | - | நீர் உட்கசிந்து வெளியிடுதல் |

www.Padasalai.Net www.TrbTnpsc.com



17) ஆ) 1. ஆளுநர் - 1098
2. சட்டமன்ற பேரவை - 1997
3. தீன்-இலாஹி - பெயரளவுத் தலைவர்
4. இராஜாராம் மோகன்ராய் - கீழவை
5. குழந்தை உதவி மைய எண் - தெய்வீக நம்பிக்கை
- சமூக சீர்திருத்தவாதி

**IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக:** **5×1=5**

18) ஒளிரும் மஞ்சள் விளக்கு, வேகத்தினை குறைத்தும் எச்சரிக்கையுடனும் செல்ல வேண்டும் என்பதைக் குறிக்கின்றது.
19) மனித மற்றும் குடிமகனின் உரிமைகள் அறிவிப்பு இந்தியாவில் அறிவிக்கப்பட்டது.
20) சமண சமயம் சீனாவில் தோன்றியது.
21) முதலமைச்சர் மாநிலத்தின் தலைமை நிர்வாகி ஆவார்.
22) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஒற்றைக் குடியுரிமையை வழங்குகிறது.

**V. ஏதேனும் பத்து வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்:** **10×2=20**

23) துணைப்படைத்திட்டத்தில் கையெழுத்திட்ட நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
24) இந்தியாவில் இருந்த ஆங்கிலேயர்களின் வர்த்தக மையங்களைக் குறிப்பிடுக
25) காந்தியடிகளின் வார்தா திட்டம் என்றால் என்ன?
26) நகர்ப்புற பகுதி என்றால் என்ன?
27) மண்ணின் வகைகளைக் கூறுக.
28) வேறுபடுத்துக: உருமாறிய பாறைகள் மற்றும் படிவுப் பாறைகள்
29) இடம்பெயர்தல் - வரையறு.
30) வறட்சியின் வகைகளைக் குறிப்பிடுக.
31) முக்கிய பொருளாதார நடவடிக்கைகளின் பெயர்களை எழுதுக.
32) மாநில சட்டமன்றத்தின் இரு அவைகளின் பெயரை எழுதுக.
33) நற்குடிமகனின் மூன்று பண்புகளை குறிப்பிடுக.
34) கல்வி உரிமைச்சட்டம் பற்றி எழுதுக.
35) ஏதேனும் நான்கு சாலை விதிகளை எழுதுக.
36) பண்டமாற்று முறை என்றால் என்ன?
37) பொருளாதாரத்தில் கருப்பு பணத்தின் விளைவுகள் யாவை?

**VI. விரிவான விடையளி: (ஏதேனும் ஏழு கேள்விகளுக்கு விடையளிக்கவும்)** **7×5=35**

38) நவீன இந்தியாவின் வரலாற்று ஆதாரங்கள் பற்றிக் குறிப்பிடுக.
39) 1857 ஆம் ஆண்டு புரட்சியின் தோல்விக்கான காரணங்களை எழுதுக.
40) கோத்தாரி கல்விக் குழுவின் முக்கியமானப் பரிந்துரைகளைச் சுட்டிக்காட்டுக.
41) காலனித்துவ நகர்ப்புற வளர்ச்சியைப் பற்றி விளக்குக.
42) நீர்ச்சுழற்சியின் பல்வேறு படிநிலைகளைப் படத்துடன் விவரி.
43) பாறைகளை வகைப்படுத்தி விவரிக்கவும்.
44) இடம்பெயர்தலின் பல்வேறு வகைகள் யாவை? அவைகளை விளக்குக.
45) நீர் மாசுபாட்டால் ஏற்படும் விளைவுகள் குறித்து விரிவாக விவாதிக்க.
46) தொழிலகங்களின் வகைப்பாட்டை விளக்கப்படம் மூலம் விளக்குக.
47) நல்ல குடிமகனாக உன்னுடைய பொறுப்புகள் எவை?
(ஏதேனும் மூன்று கருத்துக்களை எழுதுக)

**VII.** 48) **உலக வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களை குறிக்கவும்:** **5×1=5**

(i) பிரான்ஸ் (ii) ஜப்பான் (iii) ஆப்பிரிக்கா
(iv) கோவா (v) அட்லாண்டிக் பெருங்கடல்

49) **இந்திய வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களை குறிக்கவும்:** **10×1=10**

(i) ஜாம்ஷெட்பூர் (ii) டெல்லி (iii) பம்பாய் (iv) கல்கத்தா
(v) மதுரை (vi) இலங்கை (vii) நாளந்தா (viii) கான்பூர்
(ix) பிளாசி (x) ஆற்காடு

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com